RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s251

OPEN ACCESS

# தமிழக பழங்குடிகளை அறிவதன் தேவை

**ச. ஆனந்தகுமார் [அ, *]**

[அ] வரலாற்றுத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-625021, தமிழ்நாடு, இந்தியா

# Need to Know the Tribes of Tamil Nadu

**S. Anandakumar [a, *]**

[a] Department of History, Madurai Kamaraj University, Madurai-625021, Tamil Nadu, India

* Corresponding Author: anandsaduragiri7@gmail.com

Received: 24-03-2021
Revised: 28-01-2022
Accepted: 01-02-2022
Published: 28-02-2022

Check for updates

**ABSTRACT**

Tribes are those who have seen the evolving changes from the ancient ways of life and have regulated their lives. Their social organization culture and culture is found according to the context in which they live. The so-called tribes are variously called in Tamil. Politicians refer to them as savages, literati, hill people, rain people, Tolkudi, Mudukudi, Adigudi, Purvagudi, and Gandhians refer to Gandhi as Kirijan. The tribe is an educated social group. These are people who can consistently live in a common place. Speakers of the common dialect are those who have a common one-sided social morality. Followers of common ancestral beliefs panchayat systems and religious belief systems. The Fifth Principle of Sangam Literature shows that it was the hill people who formed the way of life and culture of the ancient Tamil community according to their landscape. Thus, the majority of the indigenous people are indigenous peoples with traditional cultural identities.

**Keywords:** Sangam Literature, South Indian Tribes, Tamil Community, Tribes Culture,

## முன்னுரை

மனிதனின் தொல்குடி வாழ்க்கை முறையிலிருந்தும் வளர்ந்து வரும் மாற்றங்களைக் கண்டு, வாழ்வை நெறிப்படுத்திக் கொண்டவர்கள் பழங்குடிகள். இவர்கள் வாழும் இடங்களை மையப்படுத்திச் சூழ்நிலைக்கு ஏற்ப இவர்களின் சமூகம், பண்பாடு, கலாச்சாரம் காணப்படுகிறது. ஆனால் பழங்குடிகள் என்றால் நாகரிகமற்ற, வெளி உலக மக்களோடு தொடர்பு கொள்ளாத அல்லது தொடர்பு கொள்ள விரும்பாத மக்களைக் குறிப்பதாக உள்ளது. இப்பழங்குடிகள் உயர்ந்த மலைகளிலும், காட்டுப் பகுதிகளிலும், சமவெளியிலும் வாழ்பவர்களாக உள்ளனர். சிலர் நாடோடிகளாகவும் வாழ்கின்றனர். பழங்குடிகள் என்ற உடனே, சமுதாய வளர்ச்சியில் மிகவும் பின் தங்கிய கல்வியறிவு இல்லாத மக்கள் தான் நம் கண்முன் நிற்பர். “காடுகளை விட்டு நதிக்கரைக்கு வந்த இம்மக்கள் தங்கள் பழைய நிலையை மறந்து புதிய கலாச்சாரத்தோடும், பண்பாட்டோடும் வாழ முற்பட்டனர். ஆனால், ஒரு சில இனக்குழுக்கள் மட்டும் புவியியற் சூழலினால் ஒதுக்கப்பட்டுக் கல்வியறிவின்றி மூடநம்பிக்கைகளையும் முன்னோர்களின் வழிமுறைகளின் மீது பற்று கொண்டு இயற்கையோடு இரண்டறக் கலந்து வாழ்ந்தனர். அதே நேரத்தில் புதிய புதிய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியாலும், பிற சமூகங்களின் தலையீட்டாலும் இயற்கையைச் சேதமாக்கிப் பழங்குடியினரின் பண்பாட்டை நாசமாக்கி வரும் இந்தச் சூழ்நிலையிலும் இன்றும் இயற்கையோடு இணைந்து தங்களுடைய தேவைகளைச் சுருக்கி இயற்கையின் நபர்களாக பழங்குடிகள் வாழ்ந்து வருகின்றனர். இந்தியாவில் பழங்குடி இனத்தவர்களைக் குறித்த முறையான ஆய்வுகள் ஐரோப்பியர் வருகைக்குப் பின்னரே மேற்கொள்ளப்பட்டன. “இந்தியப் பழங்குடியினர் ஒரு கால கட்டத்தில் நகர வாழ்க்கையை

வாழ்ந்தவர்கள் என்றும் பிற்காலத்தில் ஏற்பட்ட அரசியல், சமூகக் காரணங்களால் மலைப்பகுதிக்கு விரட்டப்பட்டு பழங்குடிகளாயினர்" என்றும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர் (Rajendran, 2020). இந்த முடிவினை ஏற்றுக்கொண்டால், அவர்களின் வாய்மொழி வரலாறு, பேச்சுமொழி, வாய்மொழி இலக்கியங்கள், பண்பாடு, நம்பிக்கைகள் போன்றவற்றைத் தொகுத்து ஆராயும் போது அப்பழங்குடி மக்கள் காடுகளுக்குச் சென்றதற்கான உண்மை வரலாறு தெரியவரும்.

மானிடவியலில் பெருவழக்காகப் பயன்படுத்தப்படும் "tribe" என்னும் சொல் இலத்தின் மொழியில் "மூன்றில் ஒன்று" (one third) எனப்படும். அதாவது, உரோம் நகரை மூவர் ஒன்றுகூடி நிறுவினர் என்பதும் அதில் ஒருவரைக் குறிக்கப் "பழங்குடி" (tribe) என்னும் சொல் வந்ததென்பதும் ஒரு வழக்கு. "பழங்குடி" என்னும் பொருளுடைய சொல் முதன் முதலில் எபிரேயர்களைக் குறிப்பிடப் பயன்பட்டது. எபிரேயர்கள் கி.மு.1000 ஆண்டு வரை கட்டுக்கோப்பற்ற எளிய நிலையில் 12 குழுக்களாக வாழ்ந்தனர். ஒவ்வொரு குழுவும் தங்கள் குடிவழியை ஜேக்கபின் (jacob) 12 புதல்வர்களோடுத் தொடர்புபடுத்திக் கொண்டது. ஜேக்கப் அனைவருக்கும் பொது மூதாதையராக விளங்கினான். அதன்பின் அக்குழுக்கள் இஸ்ரேலின் 12 பழங்குடிகள் எனவும் கூறப்பட்டன. அதன் பின்னரே பழங்குடி என்னும் சொல் பொதுவான மூதாதையரிடமிருந்து தோன்றிய பல குடும்பங்களைக் கொண்ட எந்த ஒரு குழுவையும் குறிக்கும் சொல்லாயிற்று. அதன் பின்னரே tribe என்னும் ஆங்கிலச் சொல்லின் மொழிபெயர்ப்பாக பழங்குடி என்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது. தமிழில் பழங்குடிகள் என்னும் சொல்லுக்கு இணையாக இனக்குழு மக்கள், மலைவாழ் மக்கள், ஆதிவாசிகள் என்றும் பல்வேறு சொற்கள் தமிழறிஞர்களால் கூறப்படுகின்றன. வெரியர் எல்வின், லூயிஸ் போன்றோர் tribe என்பதற்கு நாகரிகத்தில் பின் தங்கியவர்கள் என்னும் பொருளில் பயன்படுத்துகின்றனர்.

## பழங்குடிகளை அறிவதன் தேவை

"வடிவேல் எறிந்த வான்பகை பொறாது

பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்

குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள"

என்னும் வரிகள் தமிழ்க் குடி மூத்தக்குடி என்பதற்குப் பழந்தமிழ் இலக்கியங்கள் சான்றாக உள்ளதைக் காணமுடிகிறது (Venkatasamy Nattar, 2018). இளம்பூரணர் கூற்றும் இந்த உண்மையை உணர்த்தி நிற்கின்றது. திருக்குறளில் பழங்குடி என்னும் தொடரை விளக்குகையில் "பரிமேலழகர் சேர, சோழ, பாண்டியர் என்றாற் போல படைப்புக் காலந்தொட்டு மேம்பட்ட குடி" என்று கூறுவதைக் காணலாம் (Puliyur Kesigan, 2016). இது பண்பாட்டுத் தளத்தில் ஒரு மிகப்பெரும் வெற்றிடத்தைத் தொடர்ந்து நிலை நிறுத்தி வருகிறதெனலாம். பழங்குடிகள் பல்வேறு படிநிலைகளில் தத்தம் பண்பாட்டுத் தனித்துவங்களைக் காத்துக்கொண்டும், பல்வேறு நிலைகளில் அண்டைப் பண்பாடுகளுடன் மற்றும் மொழிகளுடன் உறவாடி மாற்றம் பெற்றும் வருகின்றனர். மனிதகுலம் அடைய விரும்பும் மிக உயர்ந்த சமூக விழுமியங்களும் மேலைச்சமூகத்தார் வளர்த்துக் கொண்டதாக எண்ணுதற்குரிய விழுமியங்களும் இந்தியாவில் பழங்குடிகளிடம் பெரிதும் இருப்பினும் சாதியப் படிநிலையற்ற சமூகம் ஆண், பெண் பாலின உறவில் சமத்துவம், ஆணாதிக்கம் குறைந்த சமூக வாழ்வு, தனி மனித சுதந்திரம் தன்னியல்பு போக்கு மிகுதியாக இல்லாமைப் போன்ற பல உகந்த கூறுகள் இன்னும் பழங்குடிகளின் பண்பாட்டில் வளராமல் உள்ளன. எனவே, பழங்குடிகளைப் பற்றி அறிவதன் தேவை அவசியமாகிறது. "உலகளாவிய நிலையில் மனித சமூகங்கள், பண்பாடுகள் உருவாக்கியுள்ள வேறுபாடுகளை எல்லாம் உள்ளடக்கி மனிதச் சமூகத்தின் உள்ளார்ந்த போக்குகளை அறிவது மானிடவியலின் மற்றொரு முக்கிய இலக்காகும். இத்தகு போக்குகளை ஆராய்வதில் தமிழ் மண்ணின் பூர்வக்குடிகளின் பதிவுகள் மிக இன்றியமையாதவையாகும்". எனவே பழங்குடிகளை இனங்காண்பதற்குச் சில அளவு கோல்கள் முன்வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் பழங்குடித் தோற்றம் கொண்டவர்களாகவும் பூகோள ரீதியாகத் தனித்துவமான வாழ்விடத்தைக் கொண்டவர்களாகவும் தனித்துவமான பண்பாடு மொழிகள் கொண்டவர்களாகவும் இருப்பது முக்கியப் பண்புகளாகக் கொள்ளப்பட்டன.

1941-இல் தான் பழங்குடிகளை அவர்களின் இனத்தோற்றம் அடிப்படையில் கணக்கெடுக்கத் தொடங்கினர். கணக்கெடுப்பின் போது அட்டவணைப் பழங்குடிகளையும், அட்டவணைச் சாதிகளையும் இனங்கண்டு பதிவு செய்வதற்கும் பின்வரும் காரணிகள் முன்வைக்கப்பட்டுள்ளது. 1931-ஆம் ஆண்டு குடி மதிப்பிற்குப் பொறுப்பு வகித்த அன்றைய ஆணையர் (சென்சஸ் கமினர்) 'ஹட்டன்' ஒரு குறிப்பினை வட்டார கண்காணிப்பாளர்களுக்கு அனுப்பினார். அதில் பின்வரும் காரணிகளை மனதில் கொள்ளுமாறு அறிவுறுத்தினார். ஒரு சமூகம் சாதியரீதியில் ஒடுக்கப்படுமானால் அது நிச்சயம் அட்டவணைச் சாதியாக இனங்காணப்பட வேண்டும். இதற்குச் சாதியினர் ஊர் வரியைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டவர்களாக இருப்பர். மேலும், ஊர் கோயில், குளம், பள்ளி ஆகியவற்றில் பங்கு பெறுவதற்கும் தடை விதிக்கப்பட்டவர்களாக இருப்பர். உணவு, நீர் போன்றவற்றை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள முடியாதவாறு தீட்டு ஏற்படுபவர்களாக் கருதப்படுவார்கள். அடுத்து, மற்ற சாதிகளிடம் நின்று பேசும் போது இடைவெளி கடைப் பிடிக்கப்படுவதையும் காணமுடியும். இவை போன்ற இன்னும் சில காரணிகளை இனங்கண்டு அவர்களை அட்டவணை சாதிகளாகக் குடிமதிப்பில் பதியுமாறு ஹட்டன் அறிவுறுத்தினார்.

## இந்தியப் பழங்குடிகள்

உலகில் வாழும் பழங்குடியினருள் மூன்றில் ஒரு பகுதியினர் இந்தியாவில் வாழ்கின்றனர் (Behura, 1996). இவர்களில் 90 விழுக்காட்டினார் காடுகளில் வாழ்கின்றனர் (Rann Singh Mann, 1996). இந்தியாவின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி ஒவ்வொரு பத்தாண்டிலும் பழங்குடி மக்கள் வளர்ச்சி கண்டறியப்பட்டு வருகின்றது. இவர்களின் எண்ணிக்கை 1951-இன் மக்கள் தொகைக் கணக்குப்படி 20 மில்லியனாக இருந்தது. 1981-இன் கணக்குப்படி 66.5 மில்லியனாக உயர்ந்துள்ளது.

இந்தியாவில் ஏறக்குறைய 500-க்கும் மேற்பட்ட பழங்குடி இனக்குழுவினர் வாழ்கின்றனர். 1981-ஆம் ஆண்டின் குடி மதிப்பின்படி இந்தியாவில் பழங்குடிகளின் மொத்த எண்ணிக்கை 51,628,638 ஆகும். இது இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் 7.76% ஆகும். லட்சத்தீவுப் பகுதியிலும் 93.83% பழங்குடிகள் வாழ்கின்றனர். இந்தியாவில் பழங்குடியினர் இல்லாத பகுதிகள் பஞ்சாப், ஹரியான, சண்டிகர், புதுதில்லி போன்றவைகள் ஆகும். புதுச்சேரியில் ஐந்து வகையான பழங்குடிகள் இனங்காணப்பட்டுள்ளனர். இந்தியாவிலேயே பழங்குடிகள் குறைவாக உள்ள மாநிலம் பழைய உத்திரபிரதேசம் (0.21%) ஆகும். கேரளத்திலும் (1.03%) தமிழகத்திலும் (1.07%) குறைவாகவே உள்ளனர். 2007 ஆம் ஆண்டு குடிமதிப்பு இந்தியாவில் 27 மாநிலங்களில் 577 வகையான பழங்குடியினர் வாழ்வதாகக் கூறுகின்றது. இவற்றுள் "இந்திய மண்ணிற்கே உரிய பூர்விகப் பழங்குடிகளாக 75 வகையானப் பழங்குடிகள் இனங்காணப்பட்டுள்ளனர்.

## தமிழகப் பழங்குடிகள்

இந்தியாவின் கிழக்கு, மேற்குத் தொடர்ச்சி மலைகளின் பெரும்பகுதியையும் தன்னுள் கொண்டு இயற்கை வளம் மிகுந்த மாநிலமாகத் தமிழ்நாடு உள்ளது. கல்வி அறிவில் வளர்ச்சி பெற்றவர்களும், பின் தங்கிய பழங்குடிகளும் இம்மாநிலத்தில் உள்ளனர். இவர்களில் பெரும்பான்மையோர் மலைப்பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். இப்பழங்குடிகள் தமிழ்ச் சமூகத்தின் பழமையையும் பண்பாட்டின் தொன்மையையும் கொண்டவர்கள் (Perumal & Padmanabhan, 1986). இந்திய அளவிலும் கூட பண்பாடு-நாகரிக வளர்ச்சிக்கும் பழங்குடிகளின் பங்களிப்பு மிகக் கணிசமானது என்று பலரும் கூறியுள்ளனர். இவர்கள் பணம் சார்ந்த பொருளாதாரத்தை அதிமாகப் பயன்படுத்துவதில்லை. தங்களுக்கெனத் தனி மொழியும், குடும்பம் மற்றும் சமூகப் பழக்க வழக்கங்களையும் கொண்டவர்கள். பழங்குடி மக்களின் பெரும்பான்மையோருடைய மொழிகள் தமிழருடன் நெருங்கிய தொடர்புடையது என்றும் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்ததென்றும் அறிஞர்கள் கருதுகின்றனர் (Bhakthavatsala Bharathi, 2014). 2001-ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் தமிழகத்தில் முப்பத்தியாறு வகையான பழங்குடி இனத்தவர் வாழ்ந்து வருவதாகக் கூறுகின்றது (Kavitha, 2011). இவர்களின் மொத்த

மக்கள் தொகை 6,51,321 ஆகும். இது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 1.0% விழுக்காடாகும் (Bhakthavatsala Bharathi, 2018).

2001-ஆம் ஆண்டின் குடிமதிப்பின்படி தமிழகப் பழங்குடி மக்களில் 84.6% பேர் ஊரகப் பகுதிகளிலும் 15.5% பேர் நகர்புறங்களிலும் வாழ்ந்தனர். இவர்களில் குறைவான மக்களே கல்வியறிவு பெற்றவர்களாக உள்ளனர் (Bhakthavatsala Bharathi, 2018). கடந்த காலத்தில் கல்வியறிவு பெற்றவர்களின் அளவைப் பார்க்கும் போது 1981-இல் 20.45% ஆகவும், 1991-இல் 27.9% ஆகவும் இருந்துள்ளனர். 2001-ஆம் ஆண்டு குடிமதிப்பின் படி தமிழகப் பகுதிகளில் அதிகம் கல்வியறிவு பெற்ற பழங்குடிகளாகக் கொண்டாரெட்டிகள் காணப்படுகின்றனர் (Bhakthavatsala Bharathi, 2019). 78.2%. இவர்களுக்கு அடுத்த நிலையில் குறும்பர்கள் (61.4%) உள்ளனர். “பழங்குடி இன மக்களின் ஆண் பெண் விகிதாச்சாரத்தைப் பார்க்கும் போது 2001- இன் கணக்கெடுப்பின்படி 1000 ஆண்களுக்கு 980 பெண்கள் இருந்துள்ளனர். 1991இல் 1000-க்கு 960 பெண்களே இருந்துள்ளனர். கடந்த பத்து ஆண்டுகளில் சற்று வளர்ச்சி அடைந்துள்ளதைக் களப்பணியின் போது அறிய முடிந்தது.

## முடிவுரை

அசாதாரண சூழலில் பிறந்து, வாழ்ந்து, கடும் சவால்களை சந்தித்த பிறகே அவர்கள் சாதிக்கிறார்கள். கல்வி, பொருளாதாரம், பண்பாட்டின் அவசியத்தை மெதுமெதுவாக உணர தொடங்கியுள்ள. அவர்கள் எல்லா துறையிலும் சிறப்பாக சாதிக்க அரசும், சமுதாயமும், துணை நிற்பது இன்றியமையாத கடமையாகும். பழங்குடி இன மக்களிடம், பண்பாடு, கலாச்சாரம் மற்றும் கட்டுக்கோப்பான ஒற்றுமைகள் உள்ளன. எனவே இயற்கையும், காடுகளையும் பாதுகாப்பது எவ்வளவு முக்கியமோ அதே அளவிற்க்கு அந்த இயற்கையை தன் இருப்பிடமாக என்னி வாழ்ந்து வரும் நம் மூதாதைய பழங்குடி மக்களை பாதுகாப்பது மிகவும் அவசியமான ஒன்றாக கருத வேண்டும்.

## References

Behura N.K., (1996) Planned Development and Quality of Life among Indian Tribes, MD Publications, New Delhi, India.

Bhakthavatsala Bharathi, (2014) Thiraavida Maanidaviyal, Kalachuvadu Pathippagam, Chennai, India.

Bhakthavatsala Bharathi, (2018) Tamilaga Pazhagkudigal, Adaiyalam Publications, Chennai, India.

Bhakthavatsala Bharathi, (2019) Tamilar Maanidaviyal, 3rd Edition, Adaiyalam Publications, Chennai, India.

Kavitha, T., (2011) Malasar pazhagkudigal, Arul Publications, Chennai, India.

Perumal, C.A., & Padmanabhan, V.K., (1986) Tribals of Tamilnadu and Public Policy, The Indian Journal Of Political Science, 47(4), 457–472.

Puliyur Kesigan, (2016) Thirukkural Parimelazhagar Urai, Poompuhar Pathippagam, Chennai, India.

Rajendran, M., (2020) Mecancy Suvadigalil Thamizhaga Pazhangudi Makkal, Adaiyalam Publications, Chennai, India.

Rann Singh Mann (1996) Tribes of India: Ongoing Challenges, M.D. Publications Pvt. Ltd., New Delhi, India.

Venkatasamy Nattar, Na.Mu., (2018) Silapathikaram Moolamum Uraiyum, 1st Edition, Gowra Agency, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License